தோற்றம் : 1971

அறிந்தேற்பு : 341/1980

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

(Recognized by the Govt. of Tamilnadu G.O.No. 341, Dt.22.03.1980)

## TAMILNADU GOVERNMENT COLLEGE TEACHERS' ASSOCIATION

TNGCTA நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. Ph : 28516573 Telefax : 28414354

பேரா. சீ. தமிழ்மணி
தலைவர்

முனைவர். எல். பிரதாபன்
பொதுச்செயலர்

முனைவர். சி. திருச்செல்வம்
பொருளர்

முனைவர். இரா. வெங்கடாசலம்
முனைவர். உஷா ரகோத்தம்
துணைத் தலைவர்கள்

பேரா. சோ. சுரேஷ்
முனைவர். ச. காமாட்சி
இணைச் செயலர்கள்

சுற்றறிக்கை எண். 31

நாள் : 16.06.2014

இனிய தோழர்களே, தோழியரே!

வணக்கம். புதிய கல்வியாண்டில் கல்விப் பணிகளும், இயக்கப் பணிகளும் சிறப்பாக அமைய அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துக்கள்.

நமது மாநிலத் தேர்தலுக்கு எதிராக சென்னை துணை பெருநகர் உரிமையியல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருந்த தடையாணையை எதிர்த்து மேல் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்ததை நாமறிவோம். பெருநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தடையாணையை மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில் நாம் மாநிலத் தேர்தல் தொடர்பாக மாநில செயற்குழுவைக் கூட்டி அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்ய வேண்டும்.

**புதிய கல்லூரி கல்வி இயக்குநர்**

நமது இயக்கத்தைச் சார்ந்த பேராசிரியர் முனைவர். மு. தேவதாஸ் அவர்கள் 30.05.2014 அன்று கல்லூரிக் கல்வி இயக்குநராக (முழு கூடுதல் பொறுப்பு) பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு இயக்கப் பொறுப்பாளர்கள் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்தனர். நிலுவையில் உள்ள பொதுக் கோரிக்கைகள் மற்றும் தனி நபர் கோரிக்கைகள் மீது தனிக் கவனம் செலுத்தி விரைந்து முடிப்பதாக உறுதியளித்ததுடன், அதற்கான முயற்சிகளையும் செய்து வருகிறார். அவர் பணி சிறக்க நமது வாழ்த்துக்கள்.

**கோரிக்கைகள் – தொடர் நடவடிக்கைகள்**

ரூ. 6000/–லிருந்து ரூ. 7000/– AGP தொடர்பாக நிதித் துறையில் கோரப்பட்ட விவரங்களை கல்லூரிகள் மற்றும் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரகங்களிடமிருந்து பெற்று உயர் கல்வித் துறைக்கு அனுப்பப்பட்ட கோப்பு மீண்டும் நிதித் துறைக்கு அனுப்பப்படும்.

TRB 2009 மற்றும் 2011 ஆசிரியர்களுக்கான பணிவரன்முறை கோப்பு கல்லூரிகளிடமிருந்து தகவல்கள் பெறப்பட்ட நிலையில் அரசுக்கு அனுப்பப்படும்.

ரூ.14940/– உயர்வூதியம் தொடர்பான தகவல்கள் கல்லூரிகளிடமிருந்து பெறப்பட்டவுடன், உயர்கல்வித் துறைக்கு அனுப்பப்படும்.

ஒப்பந்தப் பணியை ஓய்வூதியத்திற்கு கணக்கிலெடுக்கும் கோப்பு நிதித் துறையின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

முதல் மற்றும் இரண்டாம் நிலை கல்லூரிகளில் காலியாக உள்ள முதல்வர் பணியிடங்களை விரைந்து நிரப்பிட வேண்டுமெனவும், அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை விரைந்து நிரப்பிட வேண்டுமெனவும், மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்களை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

கல்லூரிகள் மறுதிறப்பின்போதே சுழற்சி–I மற்றும் சுழற்சி–II பாடப் பிரிவுகளுக்கான வருகை விரிவுரையாளர்களை நியமித்திட ஆவன செய்ய வேண்டுமென கல்லூரிக் கல்வி இயக்குநரைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

நமது தொடர் நடவடிக்கைகளின் விளைவாக வருகை விரிவுரையாளர்களுக்கு 2012 மற்றும் 2013

ஆண்டுகளுக்கான ஏப்ரல் மாத ஊதியம் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. பிற கோரிக்கைகள் மீது விரைந்து ஆணைகள் பெற கோடை விடுமுறையில் பொதுச் செயலாளர் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்களும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். கோரிக்கைகள் தொடர்பாக இயக்குநரகத்திலிருந்து தேவைப்படும் தகவல்களை கல்லூரி அலுவலகங்களிலிருந்து விரைந்து அனுப்புவதற்கான முயற்சிகளை கிளைப் பொறுப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

## மாநிலச் செயற்குழுக் கூட்டம்

நாள் : 22.06.2014 ஞாயிறு காலை 10.30 மணி
இடம் : பேரா. நரசிங்கம் நிலையம், சென்னை–5.
பொருள் 1. மாநிலத் தேர்தல்
2. பிற

அனைத்து உறுப்பினர்களும் தவறாது பங்கேற்கவும்.

* நமது இயக்கத்தின் மாநிலத் துணைத் தலைவராக இயக்கப் பணியாற்றிய பேராசிரியர் முனைவர் வி.எம். முத்துக்குமார் அவர்கள் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தராகப் பொறுப்பேற்றுள்ளார். அவரது பணி சிறக்க நமது வாழ்த்துக்கள்.
* குளித்தலை அரசு கலை கல்லூரியில் முதல்வராக பணிபுரியும் பேராசிரியர் முனைவர் ந. செல்வராசு அவர்களுக்கு பணி ஒய்வுக்கு பின்னர் திருச்சி ஈ.வெ.ரா. அரசு கலை கல்லூரியில், தாவரவியல் துறையில் ஆய்வு திட்டங்களை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவால் (UGC) Emeritus Fellowship வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நமது வாழ்த்துக்கள்.
* பல்வேறு சோதனைகளைக் கடந்து, பல சாதனைகளைப் படைத்து, 43 ஆண்டுகளாக வரலாறு படைத்துவரும் நமது இயக்கம் மேலும் பல சாதனைகளைப் படைத்து வெற்றி நடைபோட நமது வலிமையும், இயக்க உறுப்பினர்களின் ஒற்றுமையுமே என்பதை நாம் உணர்வோம்.

ஒன்றுபடுவோம்! கோரிக்கைகளை வென்றெடுப்போம்.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி. – *குறள்*

தோழமையுடன்,
இல. பிரதாபன்
பொதுச் செயலர்

சென்னை–5
16.06.2014